# "சமாதான முயற்சிகளுக்கு உதவி செய்யுங்கள்"

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 5 இதழ் 7
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17-2-1995

## சந்திரிகா கோரிக்கை

(கொழும்பு)

''கடந்த கால கசப்பு நிகழ்வுகளை ஒதுக்கித்தள்ளிவிட்டு தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு உதவி செய்யுங்கள். ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பியுங்கள் இதனால் வடக்கிலும் - கிழக்கிலும் நாம் சமாதானத்தை ஏற்படுத்த முடியும். இந்த நாட்டு மக்களுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்த முடியும்.''

இதுதான் நான் விடுதலைப் புலிகளுக்கும் வடபகுதி மக்களுக்கும அன்பாகவும் மனப்பூர்வமாகவும் விடுக்கும் வேண்டுகோளாகும்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ரூபவாஹினிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இவ்வாறு

(4ம் பக்கம் பார்க்க]

## குவேக்கர்ஸ் குழு இன்று யாழ். வருகிறது

(கொழும்பு)

குவேக்காஸ்சமாதானக் குழுவைச் சேர்நத ஐந்து பிரதிநிதிகள் இன்று மாலை யாழ்ப்பாணம வரவுள்ளனர்.

வடபகுதியின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து நேரடியாக அறிய முயலும் இப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடனும் விரிவான முறையில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. -க-இ

## வவுனியாவிலிருந்து

# வாசுதேவா தலைமையில் இன்று

# சமாதான குழு யாழ் புறப்பாடு!

## பௌத்த மதகுருவும் வருகை

[கொழும்பு]

நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, வை. ஜி.டி. சில்வா உட்பட 15 பேர் அடங்கிய சமாதானக் குழு இன்று வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை ஆரம்பிக்கும். இக்குழுவில் பௌத்த மதகுரு ஒருவரும், வேறுமத குருமாரும் அங்கம் வகிப்பர் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுகொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்துவிசேட ரயில் மூலம் இத்த சமாதான குழுவினரும் மற்றும் ஜனநாயகத்துடனா அமைதி என்ற பெயரிலான கூட்டணியினருமான சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் வவுனியா வந்து சேர்ந்தனர்.

வவுனியாவில் இ-ர்கள் அமைதிப் பேரணி ஒன்றில்

(4ம் பக்கம் பார்கக)

## 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை இம்முறை டிசம்பரில் நடைபெறும்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை இவ்வருடம டிசம்பர் மாதத்தில் நடைபெறும். பரீட்சைக்கான வினாத்தாள்களும் இம்முறை இலகுவாக்கப்படும் என உயர் கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரன தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்களின் பொது அறிவையும், பொது விவேகத்தையும் பரீட்சிக்கும் வகையில் வினாத்தாள்கள் அமையவிருக்கிறது.

புலமைப் பரிசில் பணம் பெறும் மாணவர்கள் தொகையும் 7500லிருந்து 10 ஆயிரமாக அதிகரிக்கப்படும் என்றார். -க-இ

## நாளை நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டபேரணியில அணிதிரளுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் விடயம் தொடர்பாக ஸ்ரீ லங்கா அரசு கடைப்பிடிக்கும் அசமந்தப் போக்கைக் கண்டித்து நாளை சனிக்கிழமை நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணியில் அணி திரளுமாறு பல்வேறு வெகுஜன அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன், சிமெந்து கட்டிடத் தொழிலாளர் சங்கம் ஆகியன தமது தொழிலாளர் உறுப்பினர்களை ஆர்ப்பாட்டப்பேரணியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுள்ளன. -இ

### விளையாட்டு கழகங்கள் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மைதானத்திலிருந்து ஆரம்பமாகும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் யாழ். மாவட்

(4ம் பக்கம் பார்க்க)

## தாமதங்கள் தடைகளை உடன் அகற்றவேண்டும்

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது கட்ட ஈழப் போர் ஆரம்பிக்கபபட்ட காலத்திலிருந்து முன்னைய ஆட்சி அதிகாரத்தில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தினால் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பொருளாதார தடையினாலும், இராணுவஅழுத்தங்களினாலும் தமிழ் மக்களை அடிபணிய வைக்கவோ அன்றி சுதந்திர உணர்வை முறியடிக்கவோ முடியாது என்பதை அனுபவரீதயாக உணர்ந்த இன்றைய

(4ம் பக்கம் பார்க்க)

## பேரணிசெல்லும் ஊர்வலப் பாதை

(யாழ்ப்பாணம்)

நாளை நடைபெறவிநக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி யாழ். செயலகத்தின் முன்னால் முடிவடையுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் ஆரம்பமாகும் ஊர்வலம் பலாலி வீதி, நாவலர்

(4-ம் பக்கம் பார்க்க)

### கல்வித்துறையினர்க்கு

(யாழ்ப்பாணம்)

பொது அமைப்புக்களின் ஒன்றியம் நாளை சனிக்கிழமை நடத்தவுள்ள எழுச்சிப் பேரணியில் கலந்து பேரணிக்கு வலுவூட்டும்வண்ணம் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மற்றும் கல்வித்துறை சார்ந்த அனைத்து ஆளணியினரையும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## இந்துக்கோயில்களில் உள்ள ராணுவமுகாம்களை அகற்றுக

### இந்துசமயப் பேரவை கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வன்செயல்களினால் சேதமாக்கப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்துக் கோவில்களை முன்னுரிமை கொடுத்து உடன் புனரமைப்பதற்கும், இந்துக் கோயில்களில் அமைக்கபட்டுள்ள ராணுவ முகாம்களை அகற்றி அவற்றைப் புனரமைப்புச்செய்து உடன் பூசைகள் இடம்பெற ஜனாதிபதி ஒழுங்குகள் செய்யுமாறும், வடக்கு-கிழக்கு மாகாண புனரமைப்புக்கான செயலணியை இந்துசமயப்பேரவை கோரியுள்ளது.

இது சம்பந்தமாகப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ள

(4ம் பக்கம் பார்க்க)

## வாகனங்கள் மக்களை இறக்கி ஏற்றும் இடங்கள்

(யாழ்ப்பாண்ம்)

நாளை நடைபெறவுள்ள எழுச்சிப்பேரணியில் கலந்து கொள்ளவுள்ள மக்களுடன் வரும் வாகனங்கள் மக்களை இறக்குமிடம்,ஏற்றுமிடம் சம்பந்தமான விபரம்.

இறக்கும் இடங்கள்: தென்மராட்சி கோட்டம், யாழ். வட்டம்;

யாழ். வெலிங்டன் சந்தி - பெருமாள் கோயில் வீதி பிறவுண் வீதி வழியாக சென்று கலட்டி சந்தியில் நிறுத்துதல் வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## நவம்பர் மாத நிவாரணம்

(ஆனைப்பந்தி)

இடம் பெயர்ந்தோருக்கான சென்ற வருட நவம்பர் மாத இறுதி இரண்டு வாரநிவாரண உலர் உணவுப் பொருட்களாக மாவு, சீனி, மைசூர்பருப்பு, வெந்தயம், மிளகு, சீரகம், லக்ஸ்பிறே, கைலன்ட் என்பன வழங்கப்படும் என யாழ்- செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -101

## உலர் உணவு பொருட்கள்

[ஆனைப்பந்தி]

தற்போது வழங்கப்படும் இடம் பெயர்ந்தோருக்கான சென்ற வருட நவம்பர் மாத இறுதி இரண்டு வார இலவச நிவாரண உலர் உணவுப் பொருட்களை பாவனையாளர்கள் இம்மாதம் 22ம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளு மாறுபுங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது. 101

## தபால் கட்டண அதிகரிப்பு

(கொழும்பு)

தபால் தந்தி தொடர்புகள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய தபால் கட்டண விபரம் வருமாறு: உள்ளூர் சாதாரண தபால் 2 ரூபா, தபாலட்டை 1 ரூபா, பொதிகள் 500 கிராமிற்கு 5 ரூபா, மேலதிக ஒவ்வொரு 500 கிராமிற்கு 2 ரூபா 50 சதம், பதிவு செய்யப்பட்ட தபால் 8 ரூபா 50 சதம், காப்புறுதி செய்யப்பட்டது 8 ரூபா 50 சதம் துரித கதிதபால் 10 ரூபா. இத்தபால் கட்டணஉயர்வுபெப். 15முதல் அமுலுக்கு வருகிறது. (ரி)

UNIVERSITY OF JAFFNA

**Tender Notice**

Sealed tenders are invited from contractors registered for civil Engineering works with ICTAD for 'Repair to Spectator shed at Sports Complex'

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna from 20-02-95- 23-02-95 on producing a receipt from Bursar, University of Jaffna for the following tender fee.

(1) Refundable -Rs. 1000/-

(2) Non-refundable -Rs. 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10-00 a.m. on 08-03 95.

Tender forms can be inspected free of charge at Maintenance Branch University of Jaffna during office hours.

—Registrar

University of Jaffna,
P. O. Box 57,
Jaffna.

(A-4785)

## கேள்வி அறிவித்தல்

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்க அங்கத்தவர்களின் வெதுப்பகங்களில் வேலை செய்யும் சகல தொழிலாளர்களுக்கும் தேவையான 1000 (ஆயிரம்) மேலங்கி தொப்பி தைத்து வழங்குவதற்கு கேள்விகள் தையல்காரரிடமிருந்து 23-02-95 காலை 11 00 மணிவரை மாவட்டத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மாதிரி மேலங்கியும் தொப்பியும் அதன் அளவுகளும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலங்கியும், தொப்பியும் தைப்பதற்குரியகூலி, தேவையான துணியின் அளவு, தைத்து முடிப்பதற்குரிய கால எல்லை ஆகிய விபரங்கள் தரப்பட வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் மேல் இடது மூலையில் மேலங்கிகள் எனக் குறிப்பிடப் பட வேண்டும்.

திரு. ந. பாலவிநாயகர்,
மாவட்ட செயலாளர்.

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(ஏ-4787)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## திருமதி மங்கையர்க்கரசி சிவகுமார்

தோற்றம்:- 23-01-1954 மறைவு:- 17-02-1994

விண்ணில் கலந்த உன் உயிரை
எண்ணிக் கலங்கும் இதயங்கள் எத்தனையோ
நினையாத நேரம் எம்மைப் பிரிந்த
அணையாத ஒளி விளக்கே! அருந்தவச் செல்வமே!
நேற்று வரை எங்கள் உயிரோடு குடியிருந்து
காணுமிடமெல்லாம்
உன் கருணை முகம் காட்டிய எம் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எம் இதயம்
மீண்டு வரும் நினைவலையால்
உருகி அழும் எம் உள்ளம் — எந்நாளும்
உன்னையே எண்ணித் தவிக்கின்றோம்.
இரும்பாக்கி எம்மனதை இறுக்க நினைத்தாலும்
கரும்பான உன் நினைவுகளே
கண் முன்னே நிற்குதம்மா!
மங்கை நீ ஆடிய மேடை திரைபோட்டு
இறுகியதே - பிறர்
சாவுக்கு தடைபோட்டாய் — உன்
சாவுக்கே விலையானாய்
விழிநீரை உன் நினைவுக்காய் நாம் உதிர்ப்போம்
பண்பை ஒழுக்கத்தை எமக்குக் கற்பித்து
வாழ வழிகாட்டிய அன்னையே!
வருடம் ஒன்று சென்றதம்மா!
ஆனாலும் உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது
கண்ணை இமை காப்பது போல்
மண்ணகத்தில் எம்மைக் காத்த தாயே!
விண்ணகத்தினின்றும் காத்தருள வேண்டும் அம்மா!

எந்நாளும் உமது ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பணிகின்றோம்.

— கணவன் — மகன்
உறவினர்கள்.

(சி-4783)

நிரந்தர சமாதானம்

# ஏற்படுவதை அரசு தட்டிக்கழிக்கப் பார்க்கிறது

— கிராமிய உழைப்பாளர் சங்கம் —

(யாழ்ப்பாணம்)

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதற்கான பேச்சுவார்த்தைகளை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முன்னெடுப்பதற்கான அங்கீகாரத்தை சிங்கள மக்களாணையாகப் பெற்றுக் கொண்டது தற்போதைய சிறிலங்கா அரசு. அரசியல் தீர்வு காண்பதற்கு முன்பு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு நிவர்த்தி காண தவறுவதன்மூலம், இங்கு இயல்பு நிலையையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் செயற்பாடுகளைத் தட்டிக் கழிக்கிறது.

இவ்வாறு நாளை 18ம் திகதி சனிக்கிழமை யாழ். நகரில நடைபெறும் ஆர்ப்பாட்ட பேரணி தொடர்பாக யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

உண்மையாகவே சிறிலங்கா அரசு அரசியல் தீர்வு காணுவதில் அக்கறை கொண்டுள்ளதா என்பதில் தமிழ் மக்களுக்கு நியாயமான சந்தேகமெழுகிறது.

சிறிலங்கா அரசின் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவீனமாக 2400 கோடி ரூபா ஒதுக்கீடு.

கிழக்கில் இராணுவ நிலைகளைப் பலப்படுத்தல்.

தமிழ் மக்கள் சுதந்திரமாக அச்சமற்ற போக்குவரத்தை மேற்கொள்ளப் பூநகரிப் பாதையைத் திறந்து பூநகரிப் பிரதேசத்திலிருந்து இராணுவத்தை அகற்ற மறுத்தல்

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கைக்கு மாறாக மீன்பிடித்தலுக்கு வரையறைகள், கடற்தொழிலாளர் துன்புறுத்தப்படல்.

பொருளாதாரத்தடை முற்றாக நீக்கப்படாமை,

நிரந்தர போர் நிறுத்தம் மேற்கொள்ளத் தயங்கம்.

வட-கிழக்கில் மட்டும் அவசரகாலச்சட்டம் அமுலாக்கப்படல்.

இடம்பெயர்ந்த மக்கள் தமது பிரதேசத்திற்கு திரும்பச் செல்வதற்கான ஆரம்ப நடவடிக்கையாக இராணுவ முகாம்களையும், வீதித்தடைகளையும், சோதனை முகாம்களையும் அகற்றாமை.

புனரமைப்பு, அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்க மறுத்தல்

விடுதலைப் புலிகள் நிரந்தர சமாதானத்திற்கு விருப்பைத் தெரிவித்திருந்தும் தீர்வு காணாது, பேச்சுவார்த்தைகளை இழுத்தடித்தல் போன்றன. யாவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்கான பாதையை சிறிலங்கா அரசு மூடிவிடப் போகின்றதா? என்ற கேள்வியை நம் மத்தியில் எழுப்புகின்றன.

ஆனால் சர்வதேச சமூகம் குறிப்பாக ஐரோப்பிய சமூகம் அனைத்து மக்களது நலனில் அக்கறை கொண்ட அமைப்புகள் யாவும் இயல்பு நிலையையும், அரசியல் தீர்வையும் காணுமாறு வற்புறுத்துகின்றன. இப்படியிருந்தும் பேச்சுவார்த்தை என்ற ''மாயையை'' கடன் வழங்கும் நாடுகளுக்குக் காட்டி சிறிலங்கா அரசு ஏமாற்றப் பார்க்கிறதா? கடந்தகால வரலாறு மீண்டும் சுழன்று வருகிறதா என எண்ணத் தோன்றுகிறது.

தமிழ் மக்களாகிய நாம் பலமான நிலையிலேயே உறுதியாக உள்ளோம். துணிச்சலும், தற்கொடையும் நிரம்பியதே எமது வாழ்வு. தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகளை நிவர்த்திக்குமாறு கோருகின்ற அதேவேளை நிரந்தர சமாதானத்திற்குமான வழிமுறைகளையும் பரிசீலிக்கத் தயார் என்பதையும் எமது ஒருங்கிணைந்த பலத்தை உலகறியச் செய்யவும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள மாபெரும் பேரணியில் கலந்து கொள்ளுமாறும் அனைத்து மக்களையும் வேண்டுகின்றோம். -சி

# 2000 அடையாள அட்டைகள் யாழ். வந்தன

(மானிப்பாய்)

கொழும்பிலிருந்து யாழ். செயலகத்திற்கு வந்துசேர்ந்த 2000 தேசிய அடையாள அட்டைகள் ஆட்பதிவுத் திணைக்களப் பிரிவினால் ஒவ்வொரு பிரதேச செயலர் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் தொலைந்த அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய அட்டை பெற விண்ணப்பம் செய்தவர்களினதும் முதற்தடவையாக விண்ணப்பம் செய்தவர்களினதும் பழுதடைந்த அட்டைக்குப் பதிலாக விண்ணப்பம் செய்தவர்களினதும் அடையாள அட்டைகளே அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. -71-சி

## வெளிச்சம் வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் கலை, இலக்கிய சமூக இதழின் மாசி மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழ் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய 'சத்தியம் என்றும் சாவதில்லை அது வரலாற்றின் ஆன்மா' என்ற செய்தியும், பிரமஞானி எழுதும் 'அபத்தமும் அர்த்தமும்' புஷ்பரட்ணத்தின் 'ஈழத்தமிழர் வரலாறு' அடேல் ஆனின் 'உடையாத விலங்குகள்' ஆகிய தொடர் கட்டுரைகளும் மாலிகா, தில்லைச்சிவன், இளந்திரையன், நாமகள் ஆகியோரின் கவிதைகளும், சொக்கன் அவர்களுடனானநேர்காணலும் இடம்பெறுகின்றன. இத்துடன் விவேக்கின் ''சிறை மீட்பு'' நா. யோகேந்திரநாதனின் 'தொலை நோக்கி' ஆகிய சிறு கதைகளும், மதிப்பீட்டுரைகள் கடிதம் மற்றும் இன்னும் பல அம்சங்களுடனும் வெளிச்சம் இன்று வெளிவருகின்றது. -சி

## மாணவருக்கான உணவுப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைக்கான பொருட்களை விநியோகித்து வருகிறது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலரின் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் முத்திரைக்கான பொருட்களை இம் மாதம் 20 ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமுகாமையாளர் கேட்டுக்கொள்கிறார். சனி, ஞாயிறு தினங்களில் பொருட்கள் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. -ம

# பல்கலைக்கழக அனுமதியில் யாழ். மாணவர்கள் பாதிப்பு

## வாசுதேவா முறைப்பாடு

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதியில் யாழ். மாவட்ட மாணவர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவது தொடர்பாக பொது சன ஐக்கிய முன்னணி எம்.பி. வாசுதேவ நாணயக்கார, ஜனாதிபதிக்கும் கல்வி உயர் கல்வி அமைச்சருக்கும் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதம் ஒன்றும் இருவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: யாழ். மாழ். மாவட்டம் நீண்ட காலமாக யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு வந்த பூமி- இங்கு எந்தவிதவசதிகளுமற்ற நிலையில் மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு பரீட்சை எழுதுகின்றனர்.

இத்தகைய நிலைபல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவுக்கு தெரியாமல் இருக்க முடியாது.

கொழும்பு போன்ற சகல வசதிகளுடன் கூடிய மாவட்டங்களுக்கு வழங்கப்படும் வெட்டுப்புள்ளிகள் போன்று சில வேளைகளிலும் அதிகரித்த கூடுதலான வெட்டுப் புள்ளிகள் யாழ். மாவட்ட மாணவர்களுக்கு இடப்பட்டுள்ளன. இது தடுக்கப்பட வேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

க-இ

### மணிவாக்கு

உரையாற்றுவதற்கோ, உபதேசம் செய்வதற்கோ, படிக்காதே. மறுப்பதற்காகவோ, குழப்புவதற்காகவோ படிக்காதே. நம்புவதற்காகவோ, தலையாட்டுவதற்காகவோ படிக்காதே. சீர்தூக்கிப் பார்க்கவும் சிந்திப்பதற்குமே படி, படி, படி.

- கன்ஃபூஷியஸ்

## நமது நோக்கு

### வாசுதேவா வருகை!

சமாதானச் செய்தியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா யாழ்ப்பாணம் வருகிறார்.

தெற்கில் - போர் தவிர்க்கப்பட வேண்டும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் வழங்கப்பட வேண்டும் என நீண்ட காலமாகவே குரல் கொடுத்து வரும் துணிச்சலான தலைவர் அவர்.

முன்பு - ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோதுகூட வெற்றிவாய்ப்பைக் குறியாகக் கொள்ளாது, கருத்துக்களைப் பரப்பி மக்களை விழிப்படையச் செய்ய வேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டவர்.

ஏனைய சில இடதுசாரிகள் வழிமாறிய போதெல்லாம், தளராது நின்று கொண்ட கொள்கையை விடாது செயற்பட்டவர்.

இன்று - இரத்தினபுரி மாவட்டத்தில் மக்கள் ஆதரவு பெற்று நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகினார்.

படையினர் சிலர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, மக்களிடையே மீண்டும் இனத்துவேஷத்தைக் கட்டவிழ்க்க முயற்சிக்கின்றனர்.

''நாட்டைக் கூறுபோட இராணுவம் அனுமதிக்க மாட்டாது!'' என ஒரு பிரிகேடியர் கூறுமளவிற்கு, அரசியல் பேச்சுக்களை நிகழ்த்தும் அளவிற்கு இராணுவத்தின் செல்வாக்கு இன்னும் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை.

காரணம் என்ன? நாட்டுக்கு மாத்திரமல்ல, நாட்டின் தலைவர்களுக்கே அச்சுறுத்தலாக இருக்கும் சிலர்மீது ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமித்து ஊழல்கள் வெளிக்கொணரும்போது, பாதிக்கப்பட்டவர்கள் மறைமுக எதிர்ப்புகளை ஏற்படுத்தாமலா இருப்பார்கள்?

இந்த நிலையில் - மக்களுக்குச் சமாதானம்பற்றியும், சதி நாச வேலைகள் பற்றியும் தெரிவித்து உள்ளதை உணர வைக்க வேண்டிய பணி அவசியமானது.

அடுத்த கட்டப் பேச்சுக்கள் தளம்பிக் கொண்டிருக்கும் வேளையில், அரசுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் உருவாகித் தாமதங்கள் ஏற்படும் வேளையில், சில தலைவர்களாவது சமாதானம்பற்றித் தீவிரமாகப் பிரசாரம் செய்வது வரவேற்கக் கூடியதே!

### கராத்தே பயிற்றுநர்க்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கராத்தே பயிற்றுநர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனி பிற்பகல் 2-30 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது, இதில் யாழ். மாவட்டதிலுள்ள சகல கராத்தேப் பயிற்றுநர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொள்கின்றது.

### இன்று

(யாழ்ப்பாணம்)

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழாவில் தொடர்ந்து 19 தினங்கள் இடம்பெற்ற ''விநாயக புராணம்'' தெய்வீகப் பேருரைகள் இன்று வெள்ளிக்கிழமை நிறைவுபெறுகின்றது. இப்பேருரையை நிகழ்த்திய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியரும், காரைநகர் கம்பன்கழக அமைப்பாளருமாகிய தமிழருவி த. சிவகுமாரன் இவ்விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

### வெள்ளி விருந்து

## பேச்சா? செயலா?

''நல்லவனாயிரு!'' என உலகெங்கும் போதிக்கப்படுவதை நாம் கேட்கிறோம். ''களவெடுக்காதே, — பொய் சொல்லாதே!'' என எத்தேசத்திற் பிறந்த சிறுவர்களுக்கும் முதியோர் சொல்வதைக் காண்கிறோம்.

ஆனல், தீச்செயல்களைச் செய்யாமலிருப்பது எப்படியென ஒருவரும் சிறுவர்களுக்குச் சொல்வதில்லை. வீண் பேச்சினாற் பயனில்லை. சிறுவனுடைய மனத்தை அடக்கிஆளப் பயிற்றுவிக்கும் போதுதான் நாம் உண்மையில் அவனுக்கு உதவி புரிகிறோம்.

விரும்பியோ விரும்பாமலோ மனம் சில உடற்கருவிகளோடு தன்னைத் தொடுத்துக்கொள்கிறது. அதனால் மக்கள் அறிவின்மையான செயல்களும் புரிந்து அல்லற்படுகின்றார்கள். மனம் வயப்பட்டிருந்தால் அப்படிச் செய்யமாட்டார்கள்.

மனத்தை வயப்படுத்துவதனால் என்ன பயன்? இயல்பாகவே உணர்ச்சியும் தொழில் புரியும். சித்தமும் கட்டளைக்கு அமைந்து நிற்கும்.

— சுவாமி விவேகானந்தர்

### புலதும் பத்தும்

#### கரணவாய்

யாழ். குடாநாட்டில்...... வடமராட்சியில்...... கரணவாய்க் கிராமத்தின் பெயர் எப்படி ஏற்பட்டது? ''கருணீகர் வாயில்'' என்ற இடமே மருவிக் கரணவாய் ஆயிற்று என ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதினார்.

கருணீகர் என்பவர் யார்? கிராமத்துக் கணக்கு வேலை பார்ப்போர். யாழ்ப்பாண அரசு செழிப்புற்றிருந்தபோது...... பாண்டிநாட்டிலிருந்து 12 கருணீகர் இங்கு வந்தார்களாம் உடுப்பிட்டியின் 12 குறிச்சிகளுக்குக் கிராமக் கணக்கர்களாக நியமனம் பெற்றார்கள்.

இன்று—இந்தப் பரம்பரையில் வந்தவர்களில் சிலர் சைவக் குருமாராகி ஆகமக் கிரியைகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

— மயூரன்

## உலக வங்கியின் உதவி திரும்பும் அபாயம்

[கொழும்பு]

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் அபிவிருத்திக்கென உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் வழங்கிய 350 கோடி ரூபாவில் இதுவரை 220 கோடி ரூபா மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

எஞ்சிய 130 கோடி ரூபாவும் வரும் செப்ரெம்பர் மாதத்திற்குள் பயன்படுத்தப்படாவிடின் இந்நிதி திரும்பக்கூடிய சூழ்நிலை உருவாகும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை அரசு உலக வங்கியின் கைப்பொம்மையாக செயற்பட்டுவருவதாக பலரும் குற்றச்சாட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

[கே-சி]

## இராசி பலன்

17-02-1995

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு மாசி -05)

துதியை மாலை, 6.32 வரை பூரம் பிற்பகல் 2.09 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 11.03 முதல் 12-33 வரை சுபவேளை காலை 6.33 முதல் 8 03 வரை.

மேஷம்: உள்ளகிடக்கை, குடும்பபகை, கருத்துவேறுபாடு,

இடபம்: பயனற்ற சந்திப்பு, காரியதாமதம், அலைச்சல்.

மிதுனம்: பண்பான உபசரணை தொழில் சிறப்பு, மகிழ்ச்சி.

கடகம்: மனக்குளப்பம், எதிர்பாராத தொல்லை, வேதனை,

சிங்கம்: வாக்கு வன்மை, குடும்ப மகிழ்ச்சி, தெய்வீக சிந்தனை:

கன்னி: முரண்படல், தொழில் மந்தம், வெறுப்பு.

துலாம்: சகோதரபெருமை. பணவரவு. தியாகசிந்தை,

விருச்சிகம்: கற்பனைமிகுதி, வாய்த்தர்க்கம், பயணம்.

தனுசு: மனச்சோர்வு, வீண் பயம், கடமைதவறுதல்.

மகரம்: மறுதலித்தல், அமைதிக்குறைவு, பணநெருக்கடி.

கும்பம்: சுபகாரியம், இனிய கனவு, கலகலப்பு

மீனம்: தொழில்சாதனை, நிலைப்பேறு. புதியவருவாய்.

— ஜோஸ்யர்

### மரத்தின் செழிப்பு மழையின் களிப்பு

## ஆன் இளவரசி இலங்கை வருகிறார்

[லண்டன்]

பிரிட்டனின் அரசபரம்பரை வாரிசான ஆன் இளவரசி மார்ச் மாதம் முதல்வாரத்தில் இலங்கைக்கு முதல் தடவையாக விஜயம் மேற்கொள்கின்றார்.

சர்வதேச புகழ் வாய்ந்த பொது அமைப்பான சிறுவர் சேம-நல நிதியத்தின் தலைவராகச் செயற்படும் இளவரசி ஆன் தன்னுடைய கடமையின் நிமித்தமாகவே இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றாராம்.

1978 -79 .காலப் பகுதியில் இவ்வமைப்பு இலங்கையில்ஏற்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

[க-சி]

## காணி உறுதிகள் மீள கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

விளைபொருட் கூட்டுறவுச்சங்கங்களில் ஒப்படைக்கப்பட்ட காணி உறுதிகள் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி கிழக்கு-கொடிகாமம், தென்மராட்சி -சாவகச்சேரி, வலிகாமம் மேற்கு- சங்கானை -பண்டத்தரிப்பு, தீவுப்பகுதி-ஊர்காவற்றுறை.

ஆகிய பதிவு அழிக்கப்பட்டதான மேற்குறித்த ஐந்து விவசாய விளைபொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களிடம் கடன் பெறுவதற்காக ஒப்படைக்கப்பட்ட ஈட்டு உறுதிகளும்- அதனுடனான காணி உறுதிகளும், காணிச் சொந்தக்காரரிடம் கையளிப்பதற்காக அவ்வப் பகுதி பிரதேச செயலரிடம் வழங்கப்பட்டுள்ளன,

உரியவர்கள் தங்கள் அடையாளங்களை நிரூபித்து அவ்வப் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. மு. க, முருகையா அறிவித்துள்ளார். -ரி

### உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சி

(உடுவில்)

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு தற்போது சந்தைக்கு வரத் தொடங்கியுள்ளதால் உருளைக்கிழங்கின் விலையில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

-109

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-17

வெள்ளி இரவு

08.01 - கலைமஞ்சரி - நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம். அறிமுகமாவது ''சாளரம் சஞ்சிகையின் ஜனவரி மாத இதழ், அதனையடுத்து சிறுகதை - போராளி பாரதி எழுதிய விடியலைத் தேடி'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை சி. காண்டீபன்எழுதிய ''வாழத் துடிக்கும் ஈழத்தமிழன்''

08.25 - கணப்பொழுது . சி. கண்ணம்மா எழுதிய ''லெப்ரினன்ட் அன்பழகன்''

08.30 - செய்திகள்

08.40 - அரசியல் அரங்கம் - வே.பாலகுமாரன் எழுதிய ''இந்தியாவில் இன்னுமொரு டெங்சியாவோபிங்''

08.50 - வாத்திய கானங்கள் என்பன இடம் பெறும்.

1995-02-18

சனி காலை

07.02 - மாவீரவணக்கம்

07.15 - நீங்கள் கேட்டவை

07.30 - செய்திகள்

07.35 - பத்திரிகைச் செய்திகள்

07.40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம் பெறும்.

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-02-17

வெள்ளி மாலை

05.01 - சிந்தனைச்சிதறல்

05.02 - எழுச்சிகீதம்

05.10 - புதியவை

05.15 - கனநேரக்காவியங்கள்

05.30 - மண்ணின் குரல்

05.40 - நேயர் கடிதம்

05.45 - வெற்றிச்சுவடுகள்

06.00 - சிந்தனைக்குச் சில விஞடிகள்

06.02 - நாடகம்

06.15 - விளையாட்டுச் செய்திகள்

06.20 - என் தெரிவு

06.30 - மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

சமாதான
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:

1983ம் ஆண்டுக்குப்பின்பும் அதற்கு முன்பும் தமிழ் மக்கள் தாக்கப்பட்டதினால் என்கணவர் மிகவும் நிலைகுலைந்து காணப்பட்டார். இதற்கு ஒரு முடிவுகட்டவேண்டும் என்ற ஒரே நோக்குடன் 1984ம் ஆண்டு தை மாதம் நாம் ''இலங்கை மக்கள் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்தோம்.

நாட்டில் வாழும் சகல மக்களும் எந்த சாதி, எந்த இனம் எந்த மொழியைப் பேசுபவர்களாக இருந்தாலும் சமஉரிமைகளுடன் வாழவேண்டும் என்று எமது கட்சிக்கொள்கையை வெளியிட்டோம். சமாதான முறையில் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என்று அன்றைய அரசாங்கத்திடம் வலியுறுத்தினோம் எமது முயற்சிகள் பயனளிக்காததினால் நாம் இருவரும் சென்னைக்குச் சென்றோம்.

அங்கு ஐந்து போராளிக் குழுக்கள் இருந்தன. அவர்களுடன் நாம் பேச்சுக்கள் நடாத்தினோம். இலங்கையில் உள்ள அனைத்து சிங்களக்கட்சிகளுடனும் சமாதான முறையில் பேச்சுக்கள் நடாத்தி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உதவும்படி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தோம்.

விடுதலைப் புலிகளும் இப்பேச்சுவார்த்தைகளில் பங்குகொண்டிருந்த போதிலும் திரு. பிரபாகரனை நாம் அங்கு சந்திக்க முடியவில்லை கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தையும் மற்றவர்களையுமே சந்திக்கமுடிந்தது.

ஆனால் திரு. பிரபாகரனை தற்செயலாக சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்ற காரணத்தினால் திரு. பிரபாகரன், என் கணவருடன் பத்து நிமிடங்கள் மட்டுமே பேச்சுக்கள் நடத்தினார். ஆனால் திரு. பிரபாகரன் என்னுடன் சுமார் ஒரு மணித்தியாலமாகப் பேசினார்.

நாங்கள் இருவரும் நிறைய விடயங்கள்பற்றிப் பேசினோம். உண்மையிலேயே அது ஒரு சிநேகபூர்வமான சம்பாஷனையாகவே இருந்தது. எம் இருவருக்குமிடையில் ஒரு குறிக்கோள் இருந்தமையினால் நாம் இருவரும் மனம் விட்டுப்பேசினோம்.

''விஜய-சந்திரிகா போன்ற இலங்கைத் தலைவர்கள் இன்னும் சிலர் இருந்திருந்தால் இலங்கையில் இந்தப் பிரச்சனையே தோன்றியிருக்காது'' என்று திரு. பிரபாகரன் எமது சந்திப்பின் பின் கூறியதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கின்றது. சென்னையில் திரு. பிரபாகரனை சந்தித்தபின்பு இதுவரை நான் அவரைச் சந்திக்கவே இல்லை.

இனப்பிரச்சனையைதீர்ப்பதற்காக நான் தற்போது மேற்கொண்டுள்ள முயற்சிகள் நல்ல பலனைத் தந்திருக்கின்றன. இருந்தாலும் இந்த சமாதான முயற்சியை பல சிரமங்களின் மத்தியில் மெதுவாக கொண்டு செல்லவேண்டிஇருக்கின்றது.

இந்த நூற்றாண்டில் 'உலகம் கண்டிராத மிகப்பெரிய கெரில்லா இயக்கமான விடுதலைப் புலிகளுடன் நாம் பேச்சுக்களை நடாத்துகின்றோம் என்பதை நாம் அறியமாலில்லை. அத்துடன் சமாதானம் மிக சுலபமாக வந்துவிடாது என்பதையும் நாம் அறியாமலில்லை. விடுதலைப் புலிகளுக்கும் எமக்குமிடையில் தற்போது ஏற்பட்டுள்ள சில முட்டுக்கட்டைகள் தீர்க்கப்பட்ட பின்பே இருதரப்பினருக்குமிடையில் சமாதானத்துக்கான உறவைக் காணமுடியும்.

எதையும் தாங்கும் இதயம் தற்போது எனக்கு உண்டு. என் தந்தையும், என்கணவரும் என் அரசியல் நண்பர்கள் பலரும் படுகொலை செய்யப்பட்டது என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. எனக்கு எதிர்ப்பும் தடைகளும் போடும் பரம விரோதிகளாக மாறிய பல அரசியல் வாதிகள் இருக்கின்றார்கள். முக்கியமாக என் சொந்தக் குடும்பத்தினரே என்னை எதிர்க்கின்றார்கள், எந்த அளவுக்கு கேவலமாக என்னை எதிர்க்க முடியுமோ அந்த அளவுக்கு என்னைத் தற்போது எதிர்க்கின்றார்கள் என்றார். -வி இ

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

வாகனங்கள்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி கோட்டம், கோப்பாய் வட்டம்:

கல்வியங்காடு சந்தி - திருநெல்வேலி - ஆடியபாதம்வீதி-பிறவுண்வீதி வழியாக சென்று கொக்குவில் தொழில் நுட்ப கல்லூரி முன்நிறுத்துதல்வேண்டும்.

சண்டிலிப்பாய் வட்டம், சங்கானை வட்டம், உடுவில் வட்டம்; நல்லூர்வட்டம்

காங்கேசன்துறை வீதி வழியாகச் சென்று நாச்சிமார் கோயிலடியில் நிறுத்தல் வேண்டும்.

தீவகக்கோட்டம்
யாழ். வெலிங்டன் சந்தி - பெருமாள் கோயில்வீதி -பிறவுண்வீதி வழியாக சென்று ஆத்திசூடிவீதியில் நிறுத்தல் வேண்டும்.

ஏற்றும் இடங்கள்

தென்மராட்சி கோட்டம்;

யாழ். வட்டம்
சுண்டுக்குளிசந்தியிலிருந்துஅரியாலை நோக்கியவீதியில் நிறுத்துதல் வேண்டும்,

வடமராட்சி கோட்டம்,
கோப்பாய் வட்டம்:-
கச்சேரி நல்லூர் வீதியில் நிறுத்துதல் வேண்டும்.

சண்டிலிப்பாய் வட்டம், சங்கானை வட்டம், உடுவில் வட்டம், நல்லூர் வட்டம்:-
சுண்டுக்குழி சந்தியிலிருந்து யாழ். நோக்கிய வீதியில் நிறுத்தல் வேண்டும்.

இந்துக்கோயில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாவது: சேதமாக்கப்பட்ட இந்துக் கோயில்களைப் புனரமைக்குமாறும். கோயில்களில் அமைக்கப்பட்டுள்ளஇராணுவ முகாம்களை அகற்றுமாறும், பேரவை கடந்த சில ஆண்டுகளாகப் பதவியில் இருந்த அரசாங்கங்களைக் கோரியிருந்தது. எனினும் இது சம்பந்தமாக அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கோயில்களில் இராணுவ முகாம்கள் இருக்கும் வரை இந்த அரசாங்கம் சுதந்திரம் பற்றிப் பேசுவது அர்த்தமற்றதாகும். தொடர்ந்தும் இக்கோரிக்கைகள் புறக்கணிக்கப்படின் மாபெரும் எதிர்ப்பு இயக்கமொன்றை இந்து சமயப் பேரவை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளின்ரனின் மனைவி ஏப்ரலில் இல. விஜயம்

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனின் பாரியாரான திருமதி ஹில்லரி கிளின்ரன்எதிர்வரும் ஏப்பிரல் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பதாக இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

இவரது விஜயத்தின் முன்னோடி நடவடிக்கைகள் குறித்து கவனிக்கவென விசேட குழுவொன்று கொழும்பிற்கு விரைவில் விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் விசேட அழைப்பின் பேரிலேயே இவர் இலங்கை வரவுள்ளார்.

திருமதி ஹில்லரி கிளின்ரனின் இலங்கை விஜயத்திற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். -க

## அமைச்சர் கதிர்காமர் சீனு-பாக் விஜயம்

(கொழும்பு)

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அடுத்த வாரமளவில் சீனு, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் 22-ந் திகதி அவர் பாகிஸ்தானுக்கும் 24-ந் திகதி முதல் நான்கு நாட்கள் சீனுவுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இவரது விஜயம் குறித்த காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

சீனு - பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இலங்கை அரசு கடந்த காலங்களில் இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்திருந்தது தெரிந்ததே. -க-இ

## 25 இந்திய மீனவர் இல. அரசால் விடுதலை

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 25 இந்திய மீனவர்களை இலங்கை அரசாங்கம் நேற்று விடுதலை செய்தது.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் இந்த மீனவர்கள் கச்சதீவுக்கு அருகாமையில் கைது செய்யப்பட்டனர். இவர்களை இலங்கை கடற்படையினரே இராமேஸ்வரத்துக்குக் கொண்டுபோய் விடுதலை செய்தார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வர ஆட்சித் தலைவர் எல். கிருஷ்ணன் இவர்களை பொறுப்பேற்றுகொண்டார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. -ம-இ

## இனவிவகார அமைச்சு இன்று முதல் இயங்கும்

(கொழும்பு)

இன விவகாரங்கள் மற்றும் புனரமைப்பு நல்லிணக்கம் தொடர்பாக நியமிக்கப்பட்ட தனியான அமைச்சு இன்று முதல் கொழும்பு பிளவர் வீதியில் உள்ள பழைய பிரதமரின் அலுவலகத்தில் செயல்படவுள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்க சேவைக்கு ஆட்கள் சேர்த்துக்கொள்ளல், மற்றும் அரசகரும மொழி அமுலாக்கம் போன்றவற்றையும் இவ் அமைச்சு மேற்கொள்ளவுள்ளதாம். பொதுசன ஐக்கிய முன்னணி அரசினால் புதிதாக இவ் அமைச்சு உருவாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது: க

வவுனியாவிலிருந்து
1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டார்கள். அங்கு பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

கண்ணியத்துடன் கூடிய அமைதி உடன்பாட்டை உருவாக்கி இலங்கையின் எல்லாக் மக்களும் சமமான ஜனநாயக உரிமைகளைப் பெறும்படி செய்யுமாறு வலியுறுத்தி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரரணதுங்காவுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனுக்கும் 20 ஆயிரம் மக்கள் அஞ்சல் அட்டைகளை அனுப்பவிருக்கிறார்கள். இந்த சமாதானக்குழு இதற்கான ஏற்பாடுகளை செய்யவிருக்கிறது

யாழ். வரவிருக்கும் இந்த சமாதானக்குழு விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் உட்பட பல முக்கியஸ்தர்களை சந்தித்துப் பேச திட்டமிட்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. -இ

## சிற்றூர்திச் சேவை நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை நடைபெறும் எழுச்சிப் பேரணியில் சிற்றூர்தி உரிமையாளர்கள், ஊழியர் ஆகியோர் கலந்து கொள்வதால் சிற்றூர்தி சேவைகள் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு
1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்திலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களையும் தங்கள் கழக பதாகைகளின் கீழ் அணி திரண்டுபங்குபற்றுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

பேரணி செல்லும்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீதி, கோவில் வீதி வழியாகச் சென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பணிமனையை அடைந்து மகஜர் ஒன்றைக் கையளிக்கும்.

பின்பு அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி வழியாக யாழ். செயலகத்தை அடைந்து யாழ். அரச அதிபரிடம் மக்ஜரைக் கையளிக்கும். - வி

## குழந்தைகளின் இறப்பு வீதம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது குழந்தைகளின் இறப்பு வீதம் அண்மைக்காலமாக வெகுவாக அதிகரித்திருப்பதாக தெரியவருகிறது.

இக்குழந்தைகள் வயிற்றோட்டம்' மலேரியா, செப்ரிசிமியா, சளி சுரம் போன்ற பலநோய்களினாலேயே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பிதாகத் தெரியவருகிறது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் முதியோர். இளவயதினரின் இறப்பு விகிதமும் அதிகரித்து வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன- அண்மைக்காலப் போர்சூழ்நிலையே' இறப்பு வீதம் அதிகரிப்பதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் போதிய வைத்திய வசதியின்மை, டாக்டர்கள் பற்றாக்குறை, மருந்து தட்டுப்பாடு, போக்குவரத்து சீரின்மையும் இறப்பு விகிதப் துக்கு காரணமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. -162. சி

## இந்துமத குரு பீடாதிபதி கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

ஆர்ப்பாட்டப் பேரணியில் இந்து மதகுருமார் ஒன்றிய மாவட்டக்கிளை. கோட்டக்கிளை, வித்வத்சபை உறுப்பினர்களும் பங்குகொள்ளுமாறு இந்துமத குரு பீடாதிபதி கலாநிதி. ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளனர்

தாமதங்கள்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரிக்கா அரசு பொருளாதாரதடையைத் நீக்குவதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை விரைவாக நடாத்துவதாகவும் உறுதியளித்து வெளியுலகிற்கு தன்னை சமாதான விரும்பியாக காட்டுகின்ற இவ்வேளையில் தேர்தல் காலங்களில் மக்களுக்கு அள்ளிவழங்கிய வாக்குறுதிகளை தள்ளிவைத்து தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதில் அசமந்தபோக்கை கடைப்பிடித்து வருகின்றது. இந்நிலை கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை கண்டனப் பேரணி தொடர்பாக விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

சந்திரிகா அரசு எடுக்கும் சமாதான முயற்சிகள் உண்மையானதாக இருக்குமாயின் தாமதங்கள் தடைகள் உடன் அகற்றப்படவேண்டும் தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்ட தேவையற்ற பொருளாதார தடையை உடன் நீக்கவேண்டும். எமது மக்கள் இடம்பெயர்ந்த இடங்களுச்கு மீண்டும் குடியேற நடவடிக்கை எடுக்கவேண்டும். மொத்ததில் எமது பிரதேசத்தில் இயல்பு நிலையை தோற்றுவிக்கவேண்டும். அத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் துரிதமாக பேச்சுவார்த்தையை நடத்தி எமது சுயநிர்ணய உரிமைகளை வழங்க அரசு முன்வரவேண்டும். இவை இன்று தமிழ் மக்களால் முன்வைக்கப்படுகின்ற நியாயமான கோரிக்கையாகும்.

இக்கோரிக்கைகளை முன்வைக்கும் பேரணியில் சகல கூட்டுறவு நிறுவனங்களினதும் தலைவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள், பொது மக்கள் கலந்து உணர்ச்சி பூர்வமாக கோஷங்களை எழுப்பி எமது பிரச்னைகளை சிறிலங்கா அரசிற்கும் சர்வதேச உலகிற்கும் தெரிவிக்க அனைத்து கூட்டுறவாளர்களும் உறுதி பூணுவோமாக என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-